DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.50/2021

Prosecution side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. உமா. | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.01.2026**

Accused is present.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தற்போது சென்னை மாநகர் சென்னை ராமவரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 2 வதாக திருமணம் முடித்து நிறைமாத கர்ப்பிணியாக உள்ளேன். கடந்த 2020 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் பசுவந்தனை தெற்கு பொம்மையாபுரம் வடக்குத்தெருவில் குடியிருந்து வந்தேன். இந்த வழக்கில் இறந்துபோன மகாராஜன் எனது கணவர். மற்றொரு இறந்துபோன கருப்பசாமி எனது மாமனார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் காளிப்பாண்டி. மற்றொரு எதிரி இறந்துபோன பாலமுருகனையும் தெரியும். எதிரிகளுக்கும், எனது கணவருக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் எனது கணவரின் அண்ணன் காளிச்சாமியை எதிரிகள் வெட்டி காயப்படுத்தியதாக இரத்தக்காயங்களுடன் 17.05.2020 அன்று இரவு 11.00 மணியளவில் என் வீட்டிற்கு வந்தார். வந்தவரை மருத்துவமனைக்கு கூட்டிச்சென்று காண்பித்துவிட்டு, இறந்துபோன எதிரி பாலமுருகனிடம் பிரச்சனையை பற்றி கேட்க போகிறேன் என்று சொல்லி சென்றார். இதுதான் அவர்களுக்குள் முன்விரோதம். உடனே நான் என் கணவர் பதட்டத்துடன் பேசி செல்வதால் அங்கே சண்டை போட்டுவிடக்கூடாது என்பதற்காக எனது அம்மா அருணாசலத்தாய்க்கு போன் செய்து உடனே சென்று பார்க்குமாறும், சண்டை எதுவும் போட்டுவிடக்கூடாது என்பதற்காக சொன்னேன். என் கணவர் மகாராஜன் பைக்கில் சென்றார், பின்னால் என் மாமனார் கருப்பசாமி சென்றார். அதன்பின்னால் நான் சென்றேன். அங்கு நடுத்தெருவில் எதிரி பாலா

வீட்டிற்கு சென்று இறந்துபோன எதிரி பாலாவிடம் ஏன் என் அண்ணனை வெட்டினாய் என்று கேட்டார். அதற்கு ஆஜர் எதிரி காளிப்பாண்டி தேவடியா பசங்களா இங்கே வீடு தேடி வந்து சண்டைக்கு வருகிறீர்களா என்று சொல்லி இவனை வெட்டுடா என்று சொன்னார். உடனே இறந்துபோன எதிரி பாலமுருகன் அரிவாளை கொண்டு பைக்கில் நின்றுகொண்டிருந்த எனது கணவர் மகாராஜனை அரிவாளை கொண்டு வெட்டினார். அதை எனது மாமனார் கருப்பசாமி தடுக்க சென்றார், அவரையும் ஆஜர் எதிரி காளிப்பாண்டி வெட்ட சொன்னதன்பேரில் இறந்துபோன எதிரி பாலமுருகன் அரிவாளை கொண்டு மாறி மாறி வெட்டினார். பின்னர் நானும், எனது அம்மா அருணாசலத்தாயும் அவரை தடுக்க சென்றபோது, எங்களை தள்ளிவிட்டு சென்றுவிட்டு அரிவாளுடன் மேற்படி இருவரும் பைக்கில் சென்றுவிட்டார்கள். எனது கணவருக்கு கழுத்து, இடது காது, இடது கன்னம் ஆகிய இடங்களில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. எனது மாமனார் கருப்பசாமிக்க இடது கன்னம், இடது தோள்பட்டை, கழுத்து ஆகிய இடங்களில் வெட்டுக்காயம் இருந்தது. இருவரும் அந்த இடத்திலேயே இரத்தவெள்ளத்தில் இறந்துவிட்டார்கள். நாங்கள் அங்கிருந்து அழுதுகொண்டிருந்தோம். உடனே நாங்கள் பசுவந்தனை காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு எழுதிக்கொடுத்தேன். அந்த புகார்மனு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–1** ஆகும். புகார்மனு எழுதிக்கொடுக்கும்போது சுமார் 2.30 மணி இருக்கும். எனது கணவரை எதிரிகள் வெட்ட பயன்படுத்திய அரிவாள் மற்றும் எனது கணவர் அன்றையதினம் அணிந்திருந்த ஆடைகள், எனது மாமனார் அன்றையதினம் அணிந்திருந்த ஆடைகள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட இயலும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தக்கறையுடன் கூடிய கொடுக்கு அரிவாள் ஒன்று மொத்த நீளம் சுமார் 45 செ.மீ, கைப்பிடி 11 ½ செ.மீ, இரும்பு பாகம் 33 ½ செ.மீ (சொத்துப்பட்டியல் வரிசை எண்.8 ல் உள்ளது) அது **அ.சா.பொ. 1** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்த இரத்தக்கறையுடன் கூடிய காக்கிகலர் சட்டை (சொத்துப்பட்டியல் வரிசை எண்.2 ல் உள்ளது) அது **அ.சா.பொ. 2** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்த இரத்தக்கறையுடன் கூடிய பச்சை ஊதா கருப்பு வெள்ளை மஞ்சள் கட்டம்போட்ட லுங்கி (சொத்துப்பட்டியல் வரிசை எண்.3 ல் உள்ளது) அது **அ.சா.பொ. 3** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் எனது மாமனார் சம்பவத்தின்போது அணிந்திருந்த இரத்தக்கறையுடன் கூடிய மரக்கலர் லுங்கி (சொத்துப்பட்டியல் வரிசை எண்.1 ல் உள்ளது) அது

**அ.சா.பொ. 4** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை 2 தடவை விசாரித்தார்கள்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்து குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.20 19:19:15 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.50/2021

Prosecution side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. அருணாசலத்தாய் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.01.2026**

Accused is present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் எனது மூத்த மகள் உஷா வீட்டில் 2 சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு டயாலிசஸ் செய்து தொடர் மருத்துவ சிகிச்சையில் இருந்து குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது இளைய மகள். கடந்த 2020 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் பசுவந்தனை தெற்கு பொம்மையாபுரம் கிழக்குத்தெருவில் குடியிருந்து வந்தேன். இந்த வழக்கில் இறந்துபோன மகாராஜன் எனது மருமகன். மற்றொரு இறந்துபோன கருப்பசாமி எனது சம்மந்தக்காரர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் காளிப்பாண்டி. மற்றொரு எதிரி இறந்துபோன பாலமுருகனையும் தெரியும். அவர் காளிப்பாண்டியின் மகன். எதிரிகளுக்கும், எனது மருமகனுக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் எனது மகள் அ.சா.1 உமா எனக்கு போன் பண்ணி தனது மச்சனால் சண்டை வந்துவிட்டதாகவும், தனது கணவரும், மாமனாரும் பாலமுருகன் வீட்டிற்கு கேட்டுவிட்டு வருவதாகவும், நீ அப்பாவை உசிப்பிவிட்டு அங்கே சண்டை வராமல் பார்த்துக்கொள்ளுமாறு கூறினாள். அங்கு நானும், எனது கணவரும் சென்று பார்த்தபோது எதிரிகள் அவர்களை வெட்டிப்போட்டுவிட்டார்கள். எனது மருமகனும், அவரது அப்பாவும் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார்கள். எனது மருமகனுக்கு கழுத்தில் காயம் இருந்தது, அதை பார்த்தவுடன் எனக்கு பதட்டமாகிவிட்டது. உடனே நானும், எனது மகள் அ.சா.1 உமாவும் பசுவந்தனை காவல்நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றோம். அங்கு

அ.சா.1 உமா புகார்மனு எழுதிக்கொடுத்தாள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்து குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.20 19:10:24 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.